செ.வெ.எண்:37 நாள்: 13.01.2022

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டதில் உள்ள அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கும் தேசிய அடையாள அட்டை வழங்கிடவும் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் சிரம்மங்களை தவிர்த்திடும் பொருட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொது மக்கள் குறைதீர்க்கும் கூட்ட அரங்கில் மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் வியாழக்கிழமைகளில் அனைத்து மருத்துவர்கள் கொண்டு நடைப்பெற்றுவந்த மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை வழங்கிடும் முகாம் ஒமைக்ரான் மற்றும் கொரோனா தொற்று வேகமாக பரவி வருவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை விதமாக தொற்று குறையும் வரை அடையாள அட்டை வழங்கும் முகாம் மறு தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்படுகிறது.

மேலும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொது மக்கள் அனைவரும் அரசு விதிமுறைகளை பின்பற்றி நோய் தொற்றிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ளும் வகையில் முகக்கவசம் அணிந்து தங்களை தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**